**53 வயதைக் கடந்து பதவி உயர்வு பெற்றவர்களுக்கு பவானிசாகர் அடிப்படைப் பயிற்சி பெறுவதிலிருந்து விலக்கு – அரசாணை**

சுருக்கம்

பயிற்சி –53 வயதைக் கடந்த நேரடி நியமனம் மற்றும் பிற முறைகளில் நியமிக்கப்பட்ட இளநிலை உதவியாளர்கள் மற்றும் நேரடி நியமனம் மற்றும் பிற வகைகளில் தட்டச்சராக நியமனம் பெற்ற உதவியாளர்கள் பதவி உயர்வு பெற்றவர்களுக்கும் பவானிசாகர் அடிப்படைப் பயிற்சி பெறுவதிலிருந்து விலக்களித்து – ஆணை – வெளியிடப்படுகிறது.

**பணியாளர் மற்றும் நிருவாகச் சீர்திருத்தத் (பயிற்சி –1) துறை**

அரசாணை(நிலை) எண் :120 நாள் : 05–12–2016

படிக்க:

1.அரசாணை (நிலை)எண் .184 பணியாளர் மற்றும் நிருவாகச் சீர்திருத்தத் (பயிற்சி – 1) துறை நாள் : 15–10–1999

2.தமிழ்நாடு அரசு தட்டச்சர்கள் மற்றும் சுருக்கெழுத்தர்கள் சங்கத்தினர் மனு நாள் :23–04–2015

3.கூடுதல் தலைமைச் செயலாளர் / பயிற்சித் துறைத் தலைவரின் கடிதம் ந.க.எண். பதுத/855/2015 நாள் 31–11–2015

-------

ஆணை :மேலே ஒன்றில் படிக்கப்பட்ட அரசாணையில் கடைநிலைப் பணி / பதிவறை எழுத்தர் போன்ற இதர வகைகள் மூலம் நியமனம் பெற்ற 53 வயதைக் கடந்த உதவியாளர்களுக்கு பவானிசாகரில் நடைமுறைப்படுத்தப்படும் அடிப்படைப் பயிற்சியிலிருந்து விலக்களித்து ஆணை வெளியிடப்பட்டுள்ளது.

2. மேலே இரண்டில் படிக்கப்பட்ட தமிழ்நாடு அரசு தட்டச்சர்கள் மற்றும் சுருக்கெழுத்தர்கள் சங்கத்தின் கடிதத்தில், 2003 ஆம் ஆண்டு பணியில் சேர்ந்த 53 வயதைக் கடந்த இளநிலை உதவியாளர்கள் மற்றும் 2007 ஆம் பணியில் சேர்ந்த தட்டச்சர்கள் ஆகியோர் வயது கடந்த நிலையில் தமிழ்நாடு அரசுப்பணியாளர் தேர்வாணையம் மூலமாகத் தேர்வு செய்யப்பட்டு 53 வயதைக் கடந்த நிலையில் உதவியாளராகப் பதவி உயர்வு வழங்கப்பட்டுள்ளதால், அவர்கள் இதுவரை பணியாற்றிய அனுபவமே போதுமென்பதாலும் பயிற்சி முடித்துவிட்டு அவர்கள்

குறைந்தது 5 ஆண்டு காலம் கூட பணியாற்ற இயலாமல் போவதால் அரசுக்குப் பணிவிரயம் மட்டுமே உண்டாகும் எனவும் தெரிவித்து 53 வயதைக் கடந்த இளநிலை உதவியாளர்கள் / தட்டச்சர் பதவியிலிருந்து உதவியாளராக பதவி உயர்வு பெற்றவர்களுக்கும் பவானிசாகர் அடிப்படைப் பயிற்சி பெறுவதிலிருந்து விலக்கு அளிக்குமாறு அரசைக் கோரப்பட்டது.

3. மேலே மூன்றில் படிக்கப்பட்ட கடித்தில் கடைநிலை ஊழியர் மற்றும் பதிவறை எழுத்தர் இனங்களுக்கு மட்டுமல்லாது 53 வயதைக் கடந்து உதவியாளர்களாகப் பதவி உயர்வு பெற்ற இளநிலை உதவியாளர்கள் / தட்டச்சர் ஆகியோருக்கு அவர்களின் பணி அனுபவம் முதுமை மற்றும் பயிற்சி பெற்றபின் பணிபுரியும் காலம் 5 ஆண்டுகளுக்குக் குறைவாக இருப்பதால் அரசிற்கு ஏற்படும் பணவிரயம் ஆகியவற்றைக் கருத்தில் கொண்டு, பவானிசாகர் அடிப்படைப் பயிற்சி பெறுவதிலிருந்து விலக்கு அளிக்கலாம் என பயிற்சி துறைத் தலைவர் அரசுக்கு பரிந்துரை செய்துள்ளனர்.

4. மேற்காணும் தமிழ்நாடு அரசு தட்டச்சர்கள் மற்றும் சுருக்கெழுத்தர்கள் சங்கத்தின் கோரிக்கை மற்றும் பயிற்சி துறைத் தலைவரின் பரிந்துரை ஆகியவற்றை அரசு கவனமாக பரிசீலித்த பின்னர், அப்பரிந்துரையை ஏற்கலாம் என முடிவெடுத்து, 53 வயதைக் கடந்த நேரடி நியமனம் மற்றும் பிற முறைகளில் நியமிக்கப்பட்ட இளநிலை உதவியாளர்களின் தகுதிகாண் பருவம் விளம்பிடவும், இவ்வயதைக் கடந்த நேரடி நியமனம் மற்றும் பிறவகைகளில் நியமிக்கப்பட்ட தட்டச்சர்கள் உதவியாளர்களாக பதவியுயர்வு பெறும் போதும், பவானிசாகர் அரசு அலுவலர் பயிற்சி நிலையத்தால் நடத்தப் பெறும் அடிப்படைப் பயிற்சி பெறுவதில் இருந்து விலக்களித்து அரசு ஆணையிடுகிறது.

5. மேலே பத்தி 4 இல் வெளியிடப்பட்ட ஆணைகளுக்கு ஏற்ப தமிழ்நாடு அமைச்சுப் பணி விதிகளுக்கு உரிய திருத்தம் பணியாளர் மற்றும் நிருவாகச் சீர்திருத்தத் (பி) துறையால் தனியே வெளியிடப்படும்

ஆளுநரின் ஆணைப்படி

சீ.ஸ்வர்ணா,
அரசுச் செயலாளர்